Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-3**

Name : சிவக்குமார்
Father / Husband name : விநாயகம்
Village : கோட்டக்குப்பம்
Age : 50
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.02.2026

Accused 1, 2 presnet. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோட்டக்குப்பம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு திண்டிவனம் மதுவிலக்குப்பிரிவில் தலைமைக்காவலர் 533 ஆக பணியாற்றியபோது 14.06.2021 அன்று மாலை 05.45 மணியளவில் கலால் பிரிவில் வாகன ஓட்டுநராக ஆயுதப்படையிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட முநிகா 1934 சிவக்கொழுந்து என்பவர் பணி நிமித்தமாக கலால் காவல் நிலையம் வந்தபோது சென்னை சாலை வடஆலப்பாக்கம் சாலையில் வரும்போது கலால் காவல் நிலையம் வரும்போது வலது பக்க இன்டிகேட்டர் போட்டு PY 01 CM 5861 என்ற பல்சர் வாகனம் திரும்பும்போது அதே மார்க்கத்தில் அவரின் பின்னால் வந்த பைக் PY 01 CM 5512 என்ற அவேஞ்சர் என்ற வாகனத்தை ஓட்டிய வடஆலப்பாக்கத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரை வாகனம் திருப்புவது சம்மந்தமாகஅவர்களுக்கு தகராறு ஆகி காவல் நிலையத்திலிருந்த நாங்கள் சத்தம் கேட்டு அங்கு சென்றோம். அவர்களின் சண்டையை நிறுத்தி விசாரித்துக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த ராஜேந்திரனின் சகோதரர் ராஜ்குமார் என்பவர் எங்கள் முன்னால் கையால் காலாலும் அ.சா. 1ஐ தாக்கினார். இதுசம்மந்தமாக திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை அதிகாரி என்னை விசாரிக்க நான் நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-4**

Name : ராமதாஸ்
Father / Husband name : வெங்கடேசன்
Village : வடஆலப்பாக்கம்
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.02.2026

Accused 1, 2 presnet. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது கார் ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 14.06.2021 அன்று மாலை 05.45 மணிக்கு நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த பாபு என்பவரும் வீட்டிற்கு சென்றபோது வடஆலப்பாகம் ரோட்டிலுள்ள மதுவிலக்கு அமல்பிரிவில் ஓட்டுநராக இருக்கும் அ.சா.1 PY 01 CM 5861 பல்சர் இருச்சக்கர வாகனத்தில் இன்டிகேட்டர் போட்டு காவல் நிலையம் திரும்புபோது 1வது எதிரி PY 01 CM 5512 என்ற அவேஞ்சர் வாகனத்தில் வந்தார் என்றும், அதனை அ.சா.1 கேட்டபோது அவரை எதிரி ராஜேந்திரன் அசிங்கமாக பேசி கழுத்து பிடித்து தள்ளிவிட்டார் என்றும், அவர் கீழே விழுந்தவுடன் அவரின் கழுத்தை நெறித்தார் என்றும், நீங்களும் பாபு என்பவரை மறித்துவிட்டிர்கள் என்றும், காவல் நிலையபோலிசார் வந்து

சண்டையை மறித்தபோது எதிரி ராஜ்குமார் அங்கு வந்து அ.சா1 ஐ கையாலும், காலாலும் எட்டி உதைத்தார் என்றும், பின்னர் எதிரிகள் அ.சா..1 ஐ மிரட்டி சென்றார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.